இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 10 – வெள்ளிக்கிழமை 26 ஜுலை 2024 – சென்னை **16** பக்கங்கள் **Established : 10.8.1942 - Volume : 82 - Issue 346 : Thiruvalluvar Year - 2055 - Aadi 10 - Friday 26 July 2024 - Chennai 16 Pages ₹ 5.00**


## ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டத் தலைநகரங்களில் நாளை நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 26 -**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நாளை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கடந்த 23.07.2024 - செவ்வாய் அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை; பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும், பா.ஜ.க.வை ஆதரிக்கும் மாநில அரசுகளுக்கும் தாராளமாக நிதி ஒதுக்கியும், 'இந்தியா' கூட்டணி ஆளும் மாநிலங்களை முற்றிலும்புறக்கணித்தும் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கடுமையாகக் கண்டித்தனர்.

நேற்று முன்தினம் (24.07.2024) நாடாளுமன்ற வளாகத்திலும், நாடாளுமன்றத்திலும் 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் பா.ஜ.க. அரசின் நயவஞ்சகச் செயலைக் கண்டித்து முழக்கமிட்டும், ஆர்ப்பாட்டம்நடத்தியும்தங்கள்எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்நிலையில் தி.மு.கழகம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை அறிவித்துள்ளது.

**கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-**

**ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை!**

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாகத் தெரியவில்லை. மாறாக, தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையிலும் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

**தமிழ்நாட்டை முற்றிலும் புறக்கணித்த ஒன்றிய அரசு!**

மெட்ரோரயில்திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் **"மாற்றாந்தாய்ப் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து வருகிற ஜூலை 27, சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும்.

**மாவட்டம் முழுதும் நமது கண்டனத்தைப் பதிவு செய்வோம்!**

மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆர்ப்பாட்ட விவரங்களை தலைமைக் கழகத்திற்குத் தெரிவித்திடுக!**

தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு உடனே தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.7.2024) தலைமைச் செயலகத்தில், ஐக்கிய அமீரகத்தின் வர்த்தகத் துறை அமைச்சர் அப்துல்லா பின் தௌக் அல்மரி (His Excellency Thiru. Abdulla bin Touq Al Marri) அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சித் துறை ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஐக்கிய அமீரக தூதரகத்தின் உயர் அலுவலர்கள், பன்னாட்டு தொழில் குழுமத்தின் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கனிம வளங்களுக்கு

# வரிவிதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு!

## உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு!

*புதுடெல்லி, ஜூலை 26 -* கனிம வளங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு என்று உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கி உள்ளது.

கனிம வளங்கள் மீது மாநில அரசுகளுக்கு இருக்கும் உரிமைக்கு எதிராக ஒன்றிய அரசு மற்றும் சுரங்க நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. 25 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 86 வழக்குகளில் அரசியல் சாசன அமர்வு தங்களது தீர்ப்பு விவரங்களை வெளியிட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில், 8 நீதிபதிகள் மாநில உரிமைக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கி உள்ளனர்.

கனிம வளங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு. மாநிலங்களில் உள்ள கனிம வளத்துக்காக ஒன்றிய அரசிடம் இருந்து பெறும் ராயல்டியை வரியாக கருத முடியாது. ராயல்டி என்பது வரி அல்ல; குத்தகைத் தொகை மட்டுமே. கனிம ஒப்பந்த உரிமையாளர்கள் வழங்கும் ராயல்டி தொகை, வரி வரம்பிற்குள் வராது என்று அரசியல் சாசன அமர்வு அளித்துள்ள தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராயல்டியை வரி வரம்பிற்குள் கொண்டு வந்த உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பு ரத்து செய்யப்படுவதாகவும், சுரங்க நடவடிக்கைகளில் செலுத்தப்படும் ராயல்டி என்பது வரி என்ற முந்தைய உச்சநீதிமன்ற தீர்ப்புகள் தவறானது என்றும் அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.

கனிம வளங்கள் உள்ள நிலத்தின் மீது வரி விதிக்கும் உரிமையும் மாநில அரசுகளுக்கே உள்ளது. ஒரு நிலத்தில் இருந்து கிடைக்கும் கனிம வளத்தின் அடிப்படையில் வரி விதிக்கும் உரிமையும் மாநில அரசுக்கே உள்ளது. நிலம் என்ற சொல் கனிம வளங்கள் புதைந்துள்ள அனைத்து வகை நிலங்களையும் குறிப்பிடும் என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.

## உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கும்

# 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்திற்கு ரூ.401 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு !

**சென்னை, ஜூலை 26-**

**2024-2025ம் நிதியாண்டு முதல் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு "புதுமைப் பெண் திட்டம்" போன்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ உதவித் தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன் திட்டம்" செயல்படுத்த ரூ.401 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**

**வழிகாட்டு நெறிமுறைகள்: அரசு வெளியீடு!**

'தமிழ்ப் புதல்வன்' திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது

அதன்படி, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள் முழுமையாக பயனடைவதற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்படும்

ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு பரிமாற்றம் செய்த பின்னர் அவர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

**அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்றிருக்க வேண்டும்!**

வருமான உச்ச வரம்பு - இனம் மற்றும் ஒதுக்கீடு ஆகிய எந்தவொரு பாகுபாடும் இன்றி, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள், தமிழகத்தில் உள்ள எவ்வித கல்வி நிறுவனங்களிலும் உயர்கல்வி பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும்.

மேலும், மாணவர் பயிலும் நிறுவனம் மற்றும் பாடப்பிரிவு அரசால் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அரசுப் பள்ளிகளிலும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் தமிழ் வழியிலும் 8 ஆம் வகுப்பு அல்லது 9 ஆம் வகுப்பு அல்லது 10 ஆம் வகுப்பு வரை பயின்று தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைய தகுதி உடையவர்கள் ஆகிறார்கள் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தொலைதூர / அஞ்சல் வழியிலும், அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களிலும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையை பெற இயலாது.

பிற மாநிலங்களில் மத்திய அரசின் கீழ் செயல்படும் IIT, NIT. IISER போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களும் இத் திட்டத்தில் பயன்பெறுவர். இவர்கள் மாநில திட்ட மேலாண்மை அலகின் மூலமாக அணுகலாம்.

**உயர்கல்வியைத் தொடரும் கல்வி நிறுவனம் மூலம் விண்ணப்பிக்கலாம்!**

தமிழ்ப் புதல்வன்" திட்டத்திற்காக விண்ணப்பிக்கும் அனைவரும் ஊக்கத் தொகையைப் பெற இந்த திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட பிரத்யேக தகவல் முகமையினை (Portal) அவர்கள் உயர்கல்வியைத் தொடரும் கல்வி நிறுவனம் மூலமாக நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

அரசுக்கும், மாணவர்களுக்கும் இடையே இடைத்தரகர்களை களைவதற்கும் ஊக்கத்தொகையை மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்துவதற்கும் இந்த இணையதளம் மிகுந்த கவனத்துடன் உருவாக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

தமிழ் புதல்வன் திட்டத்தை செயல்படுத்த மாநில அளவிலான குழு, மாநில அளவிலான மேற்பார்வையாளர் குழு அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

